# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2025

| | | | | |
|---|---|---|---|---|
| **கிறிஸ்தவம்** | **Three Hours** | **15** | **T** | **I,II** |
| **Christianity** | **Gr -10** | | | |

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.

**பகுதி I**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1. "இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக் குழந்தைக்கு 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்" என இறைவாக்குரைத்தவர்
   1) எரேமியா 2) எசாயா 3) மீக்கா 4) ஆமோஸ்

2. மெசியாவின் ஆட்சியில் காணப்படும் பிரதான பண்புகள்
   1) நீதியும் நேர்மையும் 2) உண்மையும் நீதியும்
   3) அன்பும் இரக்கமும் 4 ) மன்னிப்பும் பொறுமையும்

3. 'இஸ்ரயேல்'என அழைக்கப்பட்ட சந்ததி
   1) ஆபிரகாமின் சந்ததி 2) ஈசாக்கின் சந்ததி
   3) தாவீதின் சந்ததி 4) யாக்கோபின் சந்ததி

4. துன்புறும் ஊழியனின் பண்பாக அமையாதது
   1) நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்
   2) வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டார்
   3) அநீதியை அடியோடு அழித்தார்
   4) சிறுமைப்படுத்தப்பட்டார்

5. "உலகின் பாவத்தைப் போக்குபவர்" என இயேசுவை அறிமுகப்படுத்தியவர்
   1) சிமியோன் 2) திருமுழுக்கு யோவான்
   3) செக்கரியா 4) மரியா

6. அருள் தரும் ஆண்டில் (யூபிலி வருடத்தில்) விடுவிக்கப்படும் விடயங்களுள் ஒன்று.
   1) அடிமைகள் 2) படைவீரர்கள்
   3) உலக சொத்துக்கள் 4) தீயசக்திகள்

7. " இறைதிட்டம் நிறைவேற காலம், வயது போன்றவை தடையல்ல" என்பதை எடுத்துக் காட்டிய நிகழ்வு
   1) இயேசுவின் பிறப்பு 2) திருமுழுக்கு யோவானின் பிறப்பு
   3) இடையர்களின் வருகை 4) பன்னிரண்டு வயதில் இயேசுவின் போதனை

Past Papers Wiki

8. இயேசுவால் ஓய்வுநாளில் குணமாக்கப்பட்ட இருவர்
   1) நீர்க் கோவைநோயாளி, கை சூம்பியவர்
   2) பேதுருவின் மாமி, நீர்க்கோவைநோயாளி
   3) கூன் விழுந்த பெண், பிறவிமுடவன்
   4) இரத்தப் போக்குடைய பெண்

9. "கிறிஸ்டொஸ்"என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்
   1) கடவுள் நம்மோடு
   2) முழுமையானஅன்பு
   3) கடவுள் பெலனாயிருக்கிறார்
   4) விடுவிப்பார்

10. தலைமகன் அர்ப்பணம் இடம்பெற வேண்டியது
   1) 8 நாட்களில்
   2) 30 நாட்களில்
   3) 7 நாட்களில்
   4) 40 நாட்களில்

பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்க.

A- திருக்கோவிலில் எப்போதும் மன்றாடிக் கொண்டிருந்தவர்

B- தாழ்மையும் நம்பிக்கையும் நிறைந்தவர்

C- சாரிபாத்தில் வாழ்ந்த கைம்பெண்ணிடம் அனுப்பப்பட்டவர்

D- "நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய் விடும்"

11. இறைவாக்கினர் அன்னா பற்றிய கூற்றாக அமைவது
   1) A 2) B 3 ) C 3) D

12. இறைவாக்கினர் எலியாவுடன் தொடர்புபட்ட கூற்றாகஅமைவது
   1) A 2) B 3 ) C 4) D

13. புதிய ஏற்பாட்டுக் காலப்பகுதியில் தமது அதிகாரங்களைப் பாதுகாப்பதற்காக உரோமை அரசுக்கு சார்பாக செயற்பட்டவர்கள்
   1) சதுசேயர்
   2) பரிசேயர்
   3) மறைநூல் அறிஞர்
   4) வரிதண்டுவோர்

14. அலகையின் சோதனைகளை வெற்றி கொள்ள இயேசு பயன்படுத்திய வேதவார்த்தைகள் உள்ளடங்கியுள்ள நூல்
   1) இணைச்சட்டம்
   2) எண்ணிக்கை
   3) திருப்பாடல்கள்
   4) நீதி மொழிகள்

15. "நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள்" என திருமுழுக்கு யோவான் அறிவுரை கூறியது.
   1) பொதுமக்களுக்கு
   2) அரசபணியாளர்களுக்கு
   3) படைவீரர்களுக்கு
   4) யூத மதத்தவருக்கு

16. நாசரேத்து அறிக்கையில் குறிப்பிடப்படும் மெசியாவின் பணியுடன் தொடர்புபடாதவர்
   1) ஏழைகள்
   2) சிறைப்பட்டோர்
   3) பார்வையற்றோர்
   4) நொறுக்கப்பட்டோர்

17. இயேசுவின் சீடர்களுள் தீவிரவாதி எனப்பட்டவர்
   1) பிலிப்பு
   2) பர்த்தலமேயு
   3) சீமோன்
   4) யாக்கோபு

18. "ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளைப் போல அனுப்புகிறேன்" என நற்செய்திப் பணியின் நிமித்தம் இயேசு கூறியது
   1) 72 சீடர்களுக்கு
   2) 12 சீடர்களுக்கு
   3) பேதுருவுக்கு
   4) விண்ணேற்ப்பின் போது சீடர்களுக்கு

19. ஓய்வுநாளில் இயேசுவால் குணமாக்கப்பட்ட பெண்
   1) 12 வருடங்கள் எதிர்பார்ப்பிழந்த பெண்
   2) 18 வருடங்கள் தீயஆவியால் பீடிக்கப்பட்டு கூன் விழுந்த பெண்
   3) பேதுருவின் மாமியார்

4) யாயீரின் மகள்

20. “ஆபிரகாமின் மகன்” என்று இயேசுவால் அழைக்கப்பட்டவர்
1) பேதுரு
2) பர்த்தலமேயு
3) சகேயு
4) தொழுநோயாளி

21. சதுசேயர் ஏற்றுக்கொண்ட விடயமாக அமைவது
1) வானதூதர்
2) எழுத்து மூல நீதிச்சட்டம்
3) உயிர்த்தெழுதல்
4) திருமுழுக்கு யோவானின் போதனைகள்

22. குழந்தை இயேசுவைக் காண்பதற்கு மிகவும் ஆவலாக இருந்த அரசன்
1) பிலாத்து
2) பார்வோன்
3) சவுல்
4) ஏரோது

23. சீலோவாம் கோபுரம் விழுந்து இறந்தவர்களின் எண்ணிக்கை
1) 36
2) 12
3) 18
4) 40

24) “கடவுளைப் பழித்துரைக்கும் இவன் யார்?” என பரிசேயர் இயேசுவைக் கண்டித்த சந்தர்ப்பம்

1) முடக்குவாதமுற்றவரை நலமாக்கிய போது
2) 10 தொழுநோயாளர்களை நலமாக்கிய போது
3) இயேசு கோவிலைத் தூய்மையாக்கிய போது
4) விபச்சாரத்தில் பிடிபட்டபெண்ணை மன்னித்த போது

25) சதுசேயரை கடிந்துகொள்ளும் விதமாக இயேசு கூறிய உவமை
1) வஞ்சகமான உக்கிராணக்காரனின் உவமை
2) திராட்சைத் தோட்ட குத்தகைக்காரனின் உவமை
3) மன்னிக்க மறுத்த பணியாளன் உவமை
4) நல்ல சமாரியன் உவமை

பின்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

A- எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறீர்கள்?

B- நீர் யூதரின் அரசரா?

C- சீசருக்கு வரி செலுத்தவது முறையா? இல்லையா?

D- ஓய்வுநாளில் நன்மைசெய்வதா? தீமைசெய்வதா?

PAST PAPERS WIKI

26) சதுசேயர் இயேசுவிடம் வினவிய வினாக்களாக அமைவன

1)AD
2) BD
3) AC
4) CD

27) பரிசேயர், இயேசுடன் தொடர்புபட்ட வினாவாக அமைவது
1) A
2) B
3) C
4) D

28) இயேசுவிடம் வினவப்பட்ட வினாக்களாக அமைவன
1) ABC
2) CD
3) ACD
4 ) ABD

29) இறையரசின் வளர்ச்சியை வெளிப்படுத்தும் உவமை
1) நல்ல சமாரியன் உவமை
2) காணாமற் போன ஆடு பற்றிய உவமை
3) விதைப்பவன் உவமை
4) வஞ்சகமான உக்கிராணகாரனின் உவமை

30) சமநோக்கு நற்செய்திகளில் அடங்காதது
1) லூக்கா 2) மத்தேயு 3) மாற்கு 4 ) யோவான்

31) இயேசு மறுருபமடைந்த போது அங்கு தோன்றியவர்கள்
1) எலியாவும் எலிசாவும் 2) மோசேயும் எலியாவும்
3) எசாயாவும் எலியாவும் 4) தாவீதும் சாலமோனும்

32) பரிசுத்த வேதாகமத்திலே இறைவனுடைய பிரசன்னத்தை குறிக்கும் விடயங்கள்
1) மேகம், நெருப்பு 2) வானம், மலை
3) நீர், காற்று 4) கோல், நெடுங்கழி

33) நற்செய்திகளில் குறிப்பிட்டுள்ளதன் படி இயற்கைக்கு மேலான இயேசு செய்த அற்புதங்களின் எண்ணிக்கை
1) 03 2) 04 3) 05 4) 07

34) "செமயோன்" என்ற கிரேக்க பதத்தின் கருத்து
1) அற்புதங்கள் 2) அடையாளங்கள் 3) உவமைகள் 4) புதுமைகள்

35) இயேசு பார்வையற்றவருக்கு பார்வையளித்த இடம்
1) கானான் 2) கப்பர்நகூம் 3) எரிகோ 4) எம்மாவு

36) பத்து வெள்ளிக்காசு உவமை மூலம் காட்டப்படுவது
1) சந்தர்ப்பத்திற்கேற்ப ஆற்றல்கள் தாலாந்துகளைப் பயன்படுத்தல்
2) கிடைத்த ஆற்றல்களை புகழ்ச்சிக்காக பயன்படுத்தல்
3) கிடைக்கப்பெற்ற ஆற்றல்களைப் பத்திரமாகப் பாதுகாத்தல்
4) கிடைக்கப்பெற்ற ஆற்றல்கள் தாலாந்துகளை இறையரசின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தல்

37) கிறிஸ்தவ செயற்பாட்டின் மூலம் கிறிஸ்தவர் "தனித்துவம்" வெளிப்படுவது
1) கிறிஸ்தவ வாழ்வில் நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை வெளிப்படுத்தும் போது
2) கிறிஸ்தவ வாழ்வில் பிறர் விருப்பத்தை மட்டும் நிறைவேற்றும் போது
3) உலகப் பிரகாரமான வரப்பிதசாதங்களுக்காக உழைக்கும் போது
4) இறைவன் அளித்த தாலந்துகளை சுய இலாபத்திற்காக பயன்படுத்தும் போது

38) இயேசுவின் இறுதி திருவிருந்து நிகழ்வின் ஊடாக தரப்படும் செய்தி அல்லாதது
1) சகோதரத்துவத்துடன் நாம் வாழவேண்டும்
2) இயேசுவின் இரத்தம் ஜென்ம பாவத்தின் விளைவுகளில் இருந்து விடுதலை தருகிறது
3) நாம் திராட்சை இரசத்தை தினமும் பருகுதல் வேண்டும்
4) நாம் இயேசுவின் துன்புறுத்தலில் பங்குதாரர் ஆகின்றோம்

39) "உன்னுடைய தேவனாகிய கர்த்தா உன்னோடு இருப்பாராக" எனும் மன்றாட்டு கூறப்படும் சந்தர்ப்பம்
1) அர்ப்பணச் சடங்கின் போது
2) பாஸ்கா திருவிழாவின் போது
3) விருத்தசேதன நிகழ்வின் போது
4) திருநிலைப்படுத்தலின் போது

40) நன்றியறிதலை வெளிப்படுத்தும் விதமாக அமைந்த இயேசு செய்த புதுமையாக அமைவது
1) அப்பங்களை பலுகச் செய்தமை
2) பார்வையற்றவருக்கு பார்வையளித்தமை
3) காற்றையும் கடலையும் அடக்கியமை
4) பத்து தொழுநோயாளர்களை குணப்படுத்தியமை

(1x40=40 புள்ளிகள்)



Past Papers Wiki

## பகுதி II

### முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

I)

1) எலியா இறைவாக்கினரின் கூற்றுப்படி மெசியாவிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக?
2) இயேசுவை சந்திப்பதற்காக காட்டத்தி மரத்தில் ஏறி இருந்தவர் யார்? அவர் தனது மனமாற்றத்தை எவ்விதம் வெளிப்படுத்தினார்?
3) நற்செய்தியை அறிவிக்கும் வானதூதர் யார்? அவர் நற்செய்தியை முன்னறிவித்த சந்தர்ப்பங்கள் 1 தருக?
4) "இஸ்ரயேல் மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தவர் யார்? இவரது பெற்றோர் யார்?
5) இயேசு தமது வாழ்நாளில் கடைப்பிடித்த யூத சம்பிரதாயங்கள் 2 ஐக் குறிப்பிடுக?
6) திருமுழுக்கு யோவான் அரச பணியாளருக்கு கூறிய அறிவுரை யாது?
7) சதுசேயப் பிரிவினரிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு விதமான யூதசமய பதவிநிலைகளும் எவை?
8) இறையரசின் கொள்கையை வெளிப்படுத்த இயேசு கூறிய உவமைகள் இரண்டு தருக?
9) இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் யார்?
10) இயேசுவின் மரணத்தின் போது இயற்கை காட்டிய மாறுத்தரங்கள் இரண்டையும் குறிப்பிடுக?

(10x2=20 புள்ளிகள்)

II)

1) பரிசேயரின் மத்திய நிலையமாக அமைந்தது எது?
2) பரிசேயர்களுக்கு எதிராக யேசு முன்வைத்த குற்றச்சாட்டுகள் இரண்டை குறிப்பிடுக?
3) பரிசேயர் நடந்து கொண்ட முறைகளை கண்டித்த இயேசுவின் செயல்பாடுகளை பற்றி சமுதாயத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் செயற்படக் கூடிய ஐந்து வழிமுறைகளை குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

III)

1) இயேசுவின் திருப்பணியின் முக்கிய கருப்பொருள் யாது? அதனை முன்வைக்க இயேசு பயன்படுத்திய வழிமுறை ஒன்றைக் குறிப்பிடுக.
2) இறையரசிற்கும் இவ்வுலக அரசுக்கும் இடையேயான வேறுபாடுகள் மூன்று தருக?
3) இறையரசின் பிரஜையாக உமது பாடசாலையில் தலைமைத்துவப் பணியில் ஈடுபடும் போது எவ்விதம் செயல்படுவீர் என ஐந்து உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

IV)

1) இயேசுவின் துன்புறுத்தலோடு தொடர்புபட்டவர்கள் இருவரை குறிப்பிடுக?
2) கெத்சமனே வேண்டுதலின் போது இயேசு சீடர்களுக்கு கூறிய அறிவுரை யாது?
3) நீர் ஜெபத்தினூடாக வாழ்வில் இறைவனின் வல்லமையை அனுபவித்த சந்தர்ப்பங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

V)

1) யூத சமூகத்தில் பெண்கள் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் இரண்டு தருக?
2) பெண்கள் ஒடுக்கப்பட்ட யூத சமூகத்தில், இயேசு பெண்களுக்கு சிறப்பிடம் வழங்கி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
3) இன்றைய உலகில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் அநீதிகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அத்தகைய நிலைகளினின்று மீள உம்மால் முன்வைக்கக் கூடிய ஆலோசனைகள் ஐந்தினையும் குறிப்பிடுக?

VI)

1) "பேறுபெற்றோர்"என இயேசுவினால் குறிப்பிடப்படும் பிரிவினர் யாவர்?
2) இயேசு கூறிய பொன்மொழியைத் தருக?
3) இன்று பல சவால்களை எதிர்நோக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் சிலுவை மரணத்திலிருந்து பெறக்கூடிய வழிகாட்டல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக?

VII) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?

1) நசரேத்து அறிக்கை
2) பேதுரு எதிர்கொண்ட சவால்கள்
3) பன்னிரு சீடர்களை அனுப்புதல்
4) இறையரசின் சவால்கள்

(5x2= 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library